18.03.2026

Ind.OP No.10 /2025

**ம.சா.1 – மாரியாயி**

**<u>1 முதல் 25 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் சொத்து பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 15.7.2021ம் தேதி நான் பாக பாத்தியம் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் திருப்பதிலிருந்து வருகிறேன். எனக்கு அங்கு சொந்த வீடு இல்லை. நான் கோரியுள்ள பரிகாரம் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும், நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். என் பங்குக்குரிய தொகையை பெற்றுக் கொண்டுதான் பாக பாத்தியம் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றாலும், தற்போது அதை மறைத்து வறியவர் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு போதிய வருமானம் உள்ளது என்றாலும், என்னால் நீதிமன்ற கட்டணம் செலுத்த முடியும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து பாக பாத்தியம் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுப்பதற்கு நான் உரிய பிரதிபலன்

பெற்றுள்ளேன் என்றாலும், அதனால் நான் வறியவர் இல்லை என்றாலும் சரியல்ல.

**(மற்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.03.18 18:01:10 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.